1979 ஏப்ரல் 24]

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: இப்போது இருக்கின்ற மருந்துகள் தரம் குறைந்திருக்கின்றது. ஆகவேதான் பூச்சி கொல்லி மருந்துகள் பூச்சிகளைக் கொல்லுவதில்லை. கொசு மருந்துகள் கொசுவைக் கொல்லுவதில்லை. ஆகவே, மருந்துகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து 'எபக்டிவ்' ஆன மருந்தைக் கண்டு பிடித்து கொசுக்களை ஒழிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: பல்வேறு மருந்துகளைப் பயன்படுத்திய காரணத்தால் அந்தக் கொசுக்கள் மருந்தின் சக்தியைத் தாங்குகின்ற அளவுக்கு வளர்ந்து அவை தன்னுடைய சாவைத் தடுத்துக்கொள்கின்றன. ஆகவே, அந்தக் கொசுக்களைக் கொல்ல ஆற்றல் மிகுந்த மருந்துகளை அரசு தேர்ந்தெடுத்து பயன்படுத்தி கொசுவை ஒழிக்க எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

மணிமுத்தாறு நகரியப் பகுதிக்கு மருத்துவமனை.

*வினா எண் 803—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மணிமுத்தாறு டவுன்ஷிப் ஏரியாவில் அரசு மருத்துவமனை ஒன்று ஆரம்பிக்குமாறு டவுன்ஷிப் அரசைக் கோரியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். செளந்திரராஜன்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : ஏற்கனவே, அந்த டவுன்ஷிப் மீட்டிங்கில் இப்படி ஒரு ஆஸ்பத்திரி ஆரம்பிக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அரசு எந்த நிபந்தனை போட்டாலும் அதை நிறைவேற்றத் தயாராக இருப்பதாகத் தீர்மானம் போட்டிருக்கிறது. அதற்கான இடத்தைக் கொடுப்பதாகத் தீர்மானம் போட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் அரசுக்கு வந்ததா ? அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் உடனடியாக மருத்துவமனையை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, டவுன்ஷிபில் போடப்பட்ட எந்த விதத் தீர்மானமும் அரசினுடைய பரிசீலனைக்கு இதுவரையில் வரவில்லை. அந்த டவுன்ஷிப் நிறைவேற்றிய தீர்மானத்தை அரசுக்கு அனுப்புமானால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, அந்த டவுன்ஷிப்பில் தீர்மானத்தை நானே எழுதி மருத்துவ இலாகா டைரக்டரிடம் நேரடியாகக் கொடுத்திருக்கிறேன், ஆகவே அதை அரசு பெற்றிருக்கிறதா ? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, அது டவுன்ஷிப்பினுடைய அலுவலரிடமிருந்து முறைப்படி வந்தாக வேண்டும்.

திரு. செ. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி டவுன்ஷிப்பிலே கிட்டத்தட்ட நாள்தோறும் 5 ஆயிரம் பேர்கள் புளோட்டிங் பாபுலேஷன் என்ற முறையிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பது வேறு. அதற்கு அமைச்சரிடம் பதில் இருக்காது.